

நீலகிரி மாவட்டம் இத்தலார் ஊராட்சி அப்புக்கோடு பகுதியில் சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய நூலக கட்டிட கட்டுமான பணியினை மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ஊட்டியில் பள்ளிக்கல்வித்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம்

### கண்காணிப்பு அலுவலர் வினீத் தலைமையில் நடந்தது



ஊட்டி, டிச.14-

நீலகிரி மாவட்ட கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், நேற்று (13.12.2024) பள்ளிக் கல்வி மற்றும் தோட்டக் கலை ஆகிய துறைகளின் சார்பில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின்; செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் ஆவின் மேலாண்மை இயக்குநர் ீ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வினீத் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரிடையாக தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாவட்டத்திற்கு சென்று, அங்கு நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை கள ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டார்;. அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் இன்று பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் அதிகரிக்க மற்றும் ஆசிரியர்களின் வருகையினை அதிகரிக்க பள்ளிக்கல்வித்துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களின் வருகையினை அதிகரிக்க ஆய்வு அலுவலர்கள் தொடர்ந்து பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் தெளிப்பு நீர் பாசன கருவிகள் 100மூ விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது குறித்து கேட்டறியப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் மூலம் இலக்கு நிர்ணயப்பட்டதை விரைவில் எய்திடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நந்தகுமார் (பொ) உட்பட துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தாயகம் திரும்பியோர்களிடம் பெறப்பட்ட அனைத்து ஆவணங்களையும் திரும்ப ஒப்படைக்க அரசு அறிவுரை

ஊட்டி, டிச.14-

தாயகம் திரும்பியோர்களிடம் பெறப்பட்ட அனைத்து ஆவணங்களையும் திரும்ப ஒப்படைக்க அரசு அறிவுரை வழங்கியுள்ளதையடுத்து அதனை பெற்றுக்கொள்ள பயனாளிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு கடன்களுக்கு அடமானம் செய்யப்பட்ட நில ஆவணங்கள், கடவுச்சீட்டுகள் மற்றும் பிறஆவணங்கள் அனைத்தையும் அவற்றில் உள்ள கடன் வழங்கப்பட்டு தொடர்பான விவரங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, சம்பந்தப்பட்ட தாயகம் திரும்பியோர்களிடம் அனைத்து ஆவணங்களை திரும்ப ஒப்படைக்க அரசு அறிவுரை வழங்கியுள்ளதால், சம்பந்தப்பட்ட பயனாளிகள் தகுந்த ஆவணங்களுடன் தங்களது மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட கலெக்டர் அலுவலகம் அல்லது தாங்கள் கடன்பெற்ற வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகத்தினை அணுகுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## தொட்டபெட்டா- இடுஹட்டி சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிப்பு

### தொடர் மழை காரணமாக மலை ரயில் சேவை ரத்து



ஊட்டி, டிச.14-

தொட்டபெட்டா- இடுஹட்டி சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உடனடியாக நெடுஞ்சாலைதுறையினர் அப்புறப்படுத்தி சாலையை சீரமைத்தனர்.

மேலும் நீலகிரியில் பெய்து வரும் தொடர்மழையின் காரணமாக 13 மற்றும் 14 தேதிகளில் மேட்டுப்பாளையம்- ஊட்டி இடையே இயக்கப்படும் மலைரயில் சேவை ரத்துசெய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெஞ்சல் புயலால் மழை வெளுத்து வாங்கியது. இந்த நிலையில் தற்போது

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நேற்று முன்தினம் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, தென்மேற்கு மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவியது. அது இலங்கை மற்றும் தமிழக கடலோரப் பகுதிகளை நோக்கி நகரும் என்பதால் தமிழகத்தில் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

இதன்படி தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் நேற்று மழை வெளுத்து வாங்கியது. முன்னதாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சில மாவட்டங்களின் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

இதன்படி நீலகிரி மாவட்டத்திலும், ஊட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக பல்வேறு இடங்களிலும் மழை பெய்து வந்தது.

இந்த நிலையில் நேற்று காலை தொட்டபெட்டாவில் இருந்து இடுஹட்டி வழியாக செல்லும் சாலையில் மரம் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து தகவலறிந்த சம்பவ இடத்திற்கு வந்த மாநில நெடுஞ்சாலை துறையினர் மரத்தை வெட்டி அகற்றி போக்குவரத்தை சீரமைத்தனர். ஊட்டியில் நேற்று பனிமூட்டமும் அதிகரித்து காணப்பட்டதால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். ஊட்டியில் நேற்று காலை முதல் கடும் குளிர் நிலவியது. இதனால் உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பெரும் அவதிக்குட்பட்டனர்.

இந்த நிலையில் நீலகிரியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டுப்பாளையத்தில் இருந்து தினமும் காலை 7.10 மணிக்கு இயக்கப்படும் ஊட்டி மலை ரயில் நேற்றும், இன்றும் ரத்து செய்யப்படுவதாகவும், மழை குறைந்தால் வழக்கம் போல் 15-ந் தேதி மலைரயில் இயங்கும் எனவும் ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. ஊட்டியில் நேற்று காலை 14 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவியது. காற்றின் வேகம் 6 கிலோ மீட்டராகவும், காற்றில் ஈரப்பதத்தின் அளவு 95 சதவீதமாகவும் இருந்தது. இதற்கிடையே நீலகிரியில் இன்றும் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## 100 அடியை நெருங்கும் பவானி சாகர் அணை

ஈரோடு, டிச.14 -

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானி சாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி உள்ளது. பவானிசாகர் அணையின் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர் மட்டம் 99.21 அடியாக உள்ளது. நேற்று காலை அணைக்கு வினாடிக்கு 2,642 கன அடியாக நீர் வந்த நிலையில் நேற்று 4,523 கன அடியாக அதிகரித்துள்ளது. கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு நீர் திறந்து விடப்பட்டு வந்த நிலையில் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 150 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. இதைப்போல் குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 50 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.கடந்த சில நாட்களாக மாவட்டத்திலுள்ள அணைகளின் நீர் பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக குண்டேரி பள்ளம், வரட்டுபள்ளம் அணை தனது முழு கொள்ளளவில் நீடித்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவான 41.75 அடியில் நீடிக்கிறது. இதேபோல் வரட்டு பள்ளம் அணை தனது முழு கொள்ளளவான 33.46 அடியில் தொடர்ந்து நீடிக்கிறது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 22.51 அடியை நெருங்கியுள்ளது.

### பவானிசாகர் அருகே

## ஆம்னி வேனில் 1,050 கிலோ ரேஷன் அரிசி கடத்தல்: வட மாநில தொழிலாளர்களுக்கு விற்க சென்ற போது போலீசார் மடக்கி பிடித்தனர்

ஈரோடு, டிச.14 -

ஈரோடு மாவட்டத்தில் சமீப காலமாக ரேஷன் அரிசியை கடத்தி வடமாநில தொழிலாளர்களுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்யும் சம்பவம் நடைபெற்று வருகிறது. இதை தடுக்க ஈரோடு குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் பவானிசாகர் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட கொத்தமங்கலம் நால்ரோடு பகுதியில் ஈரோடு குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் சுதா, சப்-இன்ஸ்பெக்டர் மேனகா மற்றும் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். செய்தபோது அந்த வழியாக மாருதி ஆம்னி வேன் ஒன்று வந்தது. அந்த வேலை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் சுமார் 1,050 கிலோ ரேஷன் அரிசி கடத்தி கொண்டு செல்லப்பட்டது தெரிய வந்தது. இது குறித்து வேலை ஓட்டி வந்த நபரிடம் போலீசார் விசாரணை நடத்திய போது அவர் பவானியைச் சேர்ந்த தனபால் (26) என தெரிய வந்தது. இந்த ரேஷன் அரிசியை அவர் வடமாநில தொழிலாளர்களிடம் அதிக அளவில் விற்பனை செய்வதற்காக கடத்தி சென்றதை ஒப்புக்கொண்டார். இதை எடுத்து தனபாலை போலீசார் கைது செய்தனர். மேலும் 1,050 கிலோ ரேஷன் அரிசியையும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஆம்னி வேனையும் போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர் தனபால் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

## இடம் பெயர்ந்த தொழிலாளர்களை பதிவேற்றம் செய்யாமல் பணிபுரிய அனுமதித்தால் கடும் நடவடிக்கை

### தொழிலாளர் உதவி ஆணையர் எச்சரிக்கை

ஊட்டி, டிச.14-

மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த தொழிலாளர்களை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யாமல் பணிபுரிய அனுமதிக்கும் தோட்ட நிறுவனங்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊட்டி தொழிலாளர் உதவி ஆணையர் லெனின்; (தோட்டங்கள்) வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:-

சென்னை, தொழிலாளர் ஆணையரின் உத்தரவின்படி, கோவை கூடுதல் தொழிலாளர் ஆணையர் மற்றும் ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் அறிவுறுத்தல்படி, நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் அனைத்து தோட்டங்களிலும் பணிபுரியும் மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த வெளி மாநில தொழிலாளர்களின் விவரங்களை தமிழ்நாடு அரசு, தொழிலாளர் துறையின் மூலம் உருவாக்கப்பட்ட ஐஎஸ்எம் வலைதளத்தில் அந்தந்த தோட்ட நிறுவனங்களின் உரிமையாளர், வேலையளிப்பவரால் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த தொழிலாளர்களை இந்த வலைதளத்தில் பதிவேற்றம் செய்யாமல் பணிபுரிய அனுமதிக்கும் தோட்ட நிறுவனங்களின் மீது மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் மேற்கொள்ளப்படும். பணி நிபந்தனைகள் சட்டம்-1979)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## மனிதநேய ஜனநாயக கட்சியின் ஈரோடு கிழக்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம்



ஈரோடு டிச14-

மனிதநேய ஜனநாயக கட்சியின் ஈரோடுகிழக்கு மாவட்ட ஆலோசனைக் கூட்டம், மாவட்ட செயலாளர் எ.ஜாவித் பஜல் தலைமையில், மாவட்ட அவை தலைவர் மு.முஹமது ஹாரிஸ் முன்னிலையில் நடைப்பெற்றது.சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற மஜக மாநில துணைச் செயலாளர் அந்தியூர் ஷாநவாஸ், மாநில துணைச் செயலாளர் ஈரோடு எக்சான் ஆகியோர் பங்கேற்று கட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள்.

இதில், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊர்களிலும் புதிய கிளை நிர்வாகத்தை அமைப்பது, மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் தீவிர உறுப்பினர் சேர்க்கை மற்றும் செயற்குழு, பொதுக்குழு நடத்துவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், , ஈரோடு பூம்புகார் நகர் பகுதியில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பயிலும் மதரஸா செயல்பட்டு வருகிறது, அதன் அருகில் டாஸ்மாக் அரசு மதுபானக்கடை செயல்பட்டு வருகிறது, இதனால் டாஸ்மாக் கடையை அகற்ற வேண்டும், ஈரோடு சுற்றுவட்டார பகுதிகளில் செயல்படும் சாய, தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சாய, தோல் கழிவுநீர், நீர்நிலைகளில் கலப்பதால், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, எனவே நீர்நிலைகளில் சாய, தோல் கழிவு நீர் கலப்பதை தடுக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன, இதில் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் தினகரன், முன்னாள் மாவட்ட இளைஞரணி செயலாளர் ஆர்.திலீப் குமார், மாணவர் இந்தியா மாவட்ட செயலாளர் ஈ.ஐ.முகமது அமீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் கே.தினகரன் நன்றி தெரிவித்தார்,

## நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் பசுமை திருவிழா: 12 ஆயிரம் மரக்கன்றுகள் மாணவர்களுக்கு விநியோகம்



ஈரோடு, டிச. 14-

நந்தா கல்வி நிறுவனங்களின் சார்பில் 'பசுமைத்திருவிழா-2024' என்ற தலைப்பில் 12 ஆயிரம் மரக்கன்றுகள் மாணவ-மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

நந்தா கல்வி நிறுவனங்கள் ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன், ரவுண்ட் டேபில் இந்தியா, பிஎன்ஐ ஆகிய சமூக அமைப்புகளுடன் இணைந்து 'விதை சிறிது, விடை பெரிது 3.0' என்ற கருப்பொருளின் அடிப்படையில் 'பசுமைத் திருவிழா-2024' தலைப்பில் 25 வகையான மரக்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமை தாங்கினார். ஒளிரும் ஈரோடு பவுண்டேஷனின் தலைவர் எம்.சின்னசாமி, சுற்றுச்சூழல் குழுவின் தலைவர் பி.தர்மராஜ், ஈரோடு ஸ்பைஸ் ரவுண்ட் டேபிள் 211-ன் தலைவர் சி.கார்த்திகேயன், ஜேசிஐ-ன் முன்னாள் தலைவர் கே.யுவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, குத்துவிளக்கு ஏற்றினர். முன்னதாக, நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ்.ரகுபதி வரவேற்றார். இதனைத்தொடர்ந்து, கால நிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழலினை தக்க வைப்பதில் மரங்களின் பங்கு, மண்ணின் மைந்தன் என மரங்களை போற்றுவதற்கான காரணங்கள் போன்ற தகவல்களை சிறப்பு விருந்தினர்கள் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். ஆன்லைன் மூலம் முன்பதிவு அடிப்படையில் பதிவு செய்திருந்த மாணவர்களுக்கு 12 ஆயிரம் மரக்கன்றுகளை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் வழங்கினார். தொடர்ந்து, மரக்கன்றுகளை பெற்று நடவு செய்பவர்களுக்கு மின் சான்றிதழ்களும், மூன்று மாதத்திற்கு ஒருமுறை மரக்கன்றின் வளர்ச்சியின் புகைப்படத்தினை வளைத்தளத்தில் பதிவேற்றம் செய்து, அதன் அடிப்படையில் நன்கு பராமரித்து வளர்த்து வரும் மாணவர்களுக்கு 'பசுமை பாதுகாவலன் விருது' வழங்கப்பட உள்ளதாக ஒளிரும் ஈரோடு பவுண்டேஷனின் தலைவர் சின்னசாமி தெரிவித்தார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்த ஒளிரும் ஈரோடு பவுண்டேஷனின் உறுப்பினர்களையும், நந்தா கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், நிர்வாக அலுவலர்கள் மற்றும் பேராசிரியர்களையும், மரக்கன்றுகளை பெற்ற மாணவ-மாணவிகளையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலாளர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலாளர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ்.ஆறுமுகம் ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர். நிகழ்ச்சியின், முடிவில் நந்தா தொழில்நுட்பக்கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் நன்றி கூறினார்.

## ஈரோடு பெரியார் நகர் பூங்கா ஊழியர்களுக்கு பாராட்டு மற்றும் புல் வெட்டும் கருவிகள் வழங்கும் விழா



ஈரோடு டிச 14-

ஈரோடு பெரியார் நகர் பூங்காவில் பூங்கா ஊழியர்களை கவுரவிக்கும் விழாவும், மாநகராட்சிக்கு புல் வெட்டும் கருவிகள் வழங்கும் விழாவும் நடைபெற்றது. அறக்கட்டளை துணைத் தலைவர் சுப்பிரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் எஸ்.கே.எம். மயிலானந்தன் பேசுகையில் சமுதாய சேவை திட்டங்களில் அரசின் பங்களிப்பை விட பொதுமக்களின் பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார். சிறப்பு விருந்தினர்கள் மாநகராட்சி மேயர் நாகரத்தினம், துணை மேயர் செல்வராஜ் பூங்கா கமிட்டி மூலம் பூங்கா ஊழியர்களுக்கு சிறப்பு பரிசு தொகையை வழங்கி கௌரவித்தார்கள்.

அறக்கட்டளை மூலம் நன்கொடையாக வழங்கப்பட்ட 5 புல் வெட்டும் கருவிகளை எஸ்.கே.எம். மயிலானந்தன், மாநகராட்சி மண்டலம்-3 ன் உதவி ஆணையர் கார்த்திகேயிடம் வழங்கினார். அறக்கட்டளை பொருளாளர் சந்திரசேகர் பூங்கா உருவான மற்றும் நிர்வகிக்கப்படும் விதம் பற்றி விவரித்தார். செயலாளர் செந்தில் நன்றி கூறினார்.

### ஈரோடு மாவட்டத்தில்

## 152 மி.மீ. மழை பதிவு: தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கியது

ஈரோடு, டிச. 14-

வங்கக்கடலில், இலங்கையின் தெற்கு கடல் பகுதியில் ஏற்பட்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக சென்னை, விழுப்புரம், திருவாரூர், புதுக்கோட்டை, கடலூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, கரூர், ஈரோடு மற்றும் மதுரை உள்ளிட்ட 27 மாவட்டங்களில் நேற்று முன்தினம் பரவலாக லேசானது முதல் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த மழைக் காரணமாக நேற்று முன்தினம் தமிழ்நாட்டில் உள்ள 19 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.தொடர்ந்து, வரும் 17-ந் தேதி வரை மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஈரோட்டிலும் நேற்று அதிகாலை தொடங்கிய சாரல் மழை, பகல் முழுவதும் விட்டு விட்டு செய்து கொண்ட இருந்தது. இரவிலும் சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் பொது மக்கள் பள்ளிக்கு சென்ற மாணவ மாணவிகள் கடும் அவதி அடைந்தனர்.

தொடர் மழை காரணமாக மக்கள் வீடுகளில் முடங்கி இருந்தனர். நேற்று அதிகாலை முதல் சாரல் மழை பெய்தது. வானம் இருண்டு, மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் செல்வோர் சாரல் மழையில் நனைந்தபடியே சென்றனர். தாழ்வானப் பகுதியில் மழைநீர் தேங்கின்றது. ஈரோடு வ.உ.சி மார்க்கெட்டில் வழக்கம் போல் மழைநீர் தேங்கி சேரும் சகதியுமாக காட்சியளித்தது.

இதனால் கடந்த இரண்டு நாட்களாக காய்கறி வந்து வரும் பொதுமக்கள், வியாபாரிகள் சிரமப்பட்டு வருகின்றனர். கோபி, சத்தியமங்கலம், அந்தியூர், பவானி, கொடுமுடி, மொடக்குறிச்சி, பெருந்துறை என மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதேபோல் குண்டேரி பள்ளம், வரட்டு பள்ளம், பவானிசாகர் போன்ற அணை பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோட்டில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:-

ஈரோடு - 6.40, மொடக்குறிச்சி - 10, கொடுமுடி - 24, பெருந்துறை - 10, சென்னிமலை - 13, பவானி - 8.80, கவுந்தப்பாடி - 5.60, அம்மாபேட்டை - 9.20, வறட்டுப்பள்ளம் அணை - 10.40, கோபி - 7.20, எலந்தக்குட்டை மேடு - 6.40, நம்பியூர் - 1, சத்தியமங்கலம் - 10, பவானிசாகர் - 10, தாளவாடி - 0.50 என மாவட்டம் முழுவதும் 152 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

